★ ...ங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

...ளர்: 21 பங்குனி 3 ரபி-ஆகி 17 இதழ் 35
...ழ்ப்பாணம் சனிக்கிழமை 17-3-79

மீனம்பாக்கத்தில் அமிர்தலிங்கத்துக்கு பிரமாண்டமான வரவேற்பு

"தமிழர் தலைவா வருக", "தமிழர் தளபதியே வருக" கோஷங்கள் வானைப் பிளந்தன

கருணாநிதி, வீரமணி. ராஜாராம் மாலை சூட்டினர்

சென்னை. மார்ச் 16

இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்ட இலங்கை எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர் தலிங்கத்திற்கும் அவரது பாரி யாருக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பிரமாண் டமான வரவேற்பளிக்கப்பட் டது.

நேற்று இரவு 7-15 மணிக்கு இவர்கள் இருவரும் விமானத் திலிருந்து இறங்கியபோது விமான நிலையத்தில் கூடிநின்ற பல்லாயிரக்கணக்கான மக்க ளும் "தமிழர் தலைவனே வருக", "தமிழர் தளபதியே வருக" என வானளாவிய கோஷமெழுப்பி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்ற னர்.

தமிழக அரசு சார்பில்..

விமானத்திலிருந்து அமிர் இறங்கியதும் தமிழக அரசின் சார்பிலும், முதலமைச்சர்

(6-ம் பக்கம் பார்க்க)

பாலஸ்தீன இயக்கம் போன்று

தமிழர் கூட்டணி கிளைகள்

வெளிநாடுகளில் நிறுவ

இதுவரை தீர்மானிக்கவில்லை

பெரியார் நூற்றாண்டுவிழா: 'அமிர்' உரையாற்றுகிறார்

சென்னை, மார்ச். 16

இலங்கை எதிர்க்கட்சித் தலை வர் திரு. அ. அமிர்தலிங்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை ஈரோட்டில் நடை பெறும் பெரியார் ஈ.வெ. ராவின் நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

திருமதி மங்கையர்கரசு அமிர் தலிங்கம் தமிழ் நாடு எதிர்க் கட்சித்தலைவர் திரு. மு. கருணா நிதி, திராவிடர் கழகச் செய லாளர் திரு வீரமணி, திரு. கல்யாணசுந்தரம் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்து வார். [இ]

சென்னையில் அமிர் கருத்து

சென்னை, மார்ச்16

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளைகளை வெளி நாடுகளிலும் நிறுவுவதற்கு இதுவரை தீர்மானிக்கவில்லை என்று இலங்கையின் எதிர்க்கட்சித்தலை வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் தெரிவித்தார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பி.ரி.ஐ நிருபர் ஒருவர் கேட்டகேள்விக் கொருக்குப் பதில் அளிக்கையில் திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் போன்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் வெளிநாடுகளில் கிளைகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றனவா என்று நிருபர் கேட்டபோதே திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியம் 'தமிழ்ஈழம்' ஒன்றை அமைப்பதே இந்த இலட்சியத்திலிருந்து கூட்டணி என்றுமே விலகமாட்டாது என்றும் அவர் கூறினார்

எம்.ஜி.ஆர். பகல் விருந்து

தமிழக முதல்வர் திரு.எம். ஜி இராமச்சந்திரன் இன்று வெள்ளிக்கிழமை பகல் திரு. அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு தமிழக அரசின் சார்பில் மதியபோசன விருந்தளித்துக் கௌரவித்தார்.

இன்று காலை திரு. அமிர்தலிங்கம் தம்பதிகள் பெரியார், அண்ணா, காமராஜ் சமாதிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

[ம-பி]

இடைக்கால வேற்றுமைகளை நீக்கி

ஒன்றுபட்டு இயங்க முன்வருக

இளைஞர் பேரவையினருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் ஒற்றுமை கருதியும் இளைஞர் சமுதாயத்தின் ஒற்றுமை கருதியும், இடைக் காலத்தில் ஏற்பட்ட வேற்றுமைகளை நீக்கி ஒன்றுபட்டு இயங்க முன்வருமாறு தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

கடிதத்தில் மேலும் கூறப் பட்டிருப்பதாவது:-

ஏகமனதான தீர்மானம்

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு எனக்கு இட்ட ஆணைக்கு அமைவாக கூட்டணியின் அமைப்பு விதி 12-1ன்படி இளைஞர் பேரவையைக் கட்டுப்படுத்தி வழிநடத்துவதற்கு நான் எடுத்த நடவடிக்கை களை நீங்கள் அறிவீர்கள். இதுதொடர்பாக 3-3-79ல் கூட்டணித் தலைமைச் செயலகத்தில் இளைஞர் பேரவை பொதுச்சபை உறுப்பினர்களையும் வேறு சில இளைஞர் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் இளைஞர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் அதன் தலைமையிலும் முழு நம்பிக்கை கொண்டுள்ளதென்றும், கூட்டணியின் தலைமையை ஏற்ற கூட்டணியின் ஓர் அங்கமாக என்றும் இயங்குமென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவு நல்கிச் செயற்படுமென்றும் இளைஞர் பேரவை கொழும்புக் கிளை சார்பில் திரு சி. மகேந்திரன் முன்மொழிய காங்கேசன் துறை இளைஞர் பேரவை சார்பில் திரு நா. கருணைந்த சிவம் வழிமொழிய ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

இளைஞர்பேரவை பொதுச்சபை

"10-3-79ல் வவுனியாவில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச்சபை மத்திய செயற்குழுவின் தீர்மானத்திற்கு இணைய செயலாளர் நாயகம் இளைஞர் பேரவை

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்நகரில் நேற்று

இளைஞர்கள் மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

வன்செயல்களில் ஈடுபடுபவர்களைக் கண்டு பிடிக்கும் முகமாகப் பொலிசார் எடுத்து வரும் நடவடிக்கைகளில் ஒன்றாக நேற்றுமாலை யாழ். நகரில் சடைவளர்த்த வாலிபர்கள் சிலரையும் மற்றும் சந்தேகத்துக்கிடமானவர்கள் பலரையும் யாழ். பொலிசார் பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டிச் சென்று விசாரணை செய்தனர். சுமார் முப்பது பேர்வரையில் பொலிசார் கூட்டிச் சென்று விசாரணை செய்தனர். பின்னர் எட்டுப் பேர் மட்டும் மேலும் புலன் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டு ஏனையோர் தத்தம் இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

காங்கேசன்துறை, துறைமுகத்தில் இருந்து மா, உரம், ஆகியன ஏற்றிச் செல்வதற்கு

லொறிகள் தேவை

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து வெளியிடங்களுக்கு 18-3-79ம் திகதி தொடக்கம் மாவும், 24-3-79ந் திகதி தொடக்கம் உரமும் ஏற்றிச் செல்வதற்கு லொறிகள் தேவை. எங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும் குறிப்பிட்ட தொகை லொறிகளுக்கே வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

க. ஜெயபாலசிங்கம்,
கப்பல் இறக்குமதியாளர்,
காங்கேசன்துறை.

தொலைபேசித் தொடர்பு:
காங்கேசன்துறை: -34, 800
கொழும்பு:- 35267, 34925, 91719.

1928

சம்பளப் பணம் கொள்ளை:

சந்தேக நபர்கள் ஐவரும் தலா 1000 பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி சம்பளப் பணம் கொள்ளை தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் ஐவரும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பிணை தொடர்பான மனுக்கள் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நீதியரசர்களான குலரூசட் தம்பையா, அத்து கொறள, ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது,

இந்துமகளிர் கல்லூரி ஆசிரியைகளின் சம்பளப்பணமான 8,850 ரூபா 52 சதத்தை துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் த. ஜீவகன், தா. சிவக்குமாரன், இ. சந்திரராஜன், ஆ. அருள்தேவரத்தினம், இ. ஆதித்தன் ஆகியோர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி காசிநாதன் நவ

[6ம் பக்கம் பார்க்க]

வர்த்தகம்பரம்

பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டிட வேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. National Institutes 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.
1892

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate. Diploma In Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.
1891

தேவை

நகில அனுபவமுள்ள லேத்மன், வெல்டர் இருவர் தேவை வதனா வெல்டிங் வேக்ஸ் அன் இண்டஸ்ரீஸ் 44/3, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
1916

தொல்புரம் பூதராசி அம்பாள் கோவிலுக்கு அருகாமையிலுள்ள சந்திரன் அரிசி ஆலைக்கு வேலை செய்யக்கூடிய நடித்தர வயதுள்ள பத்துப்பேர் உடன் தேவை நேரில் வரவும். இ பாலசுந்தரம், உரிமையாளர், சந்திரன் அரிசிஆலை, தொல்புரம், சுழிபுரம்.
1887

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: தத்துவம் 3429

காரைநகர் வடக்கு, மாப்பாண வூரியைச் சேர்ந்த சண்முகம் நல்லதம்பி என்பவரின் மரண சாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

எதிராக

நற்குணம் பரராசசேகரம், மாப்பாணவூரி, காரைநகர் வடக்கு

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள எவரேனும், 1979ம் ஆண்டு சித்திரை மாதம் 6-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு அந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு. இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978-ம் ஆண்டு மார்கழி மாதம் 29-ந் திகதி.

இந்நீதிமன்றத்தின் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

26-2-1979.

தயாரித்தவர்;
அ மரியாம்பிள்ளை,
மனுதாரரின் சட்டத்தரணி.
1918

ஏலவிற்பனை

மீரிகாமம் மெயின் வீதி 148ம் இலக்கக் கடையில் அடவுபிடிக்கும் ந சப்பாணி அவர்களிடம் 1-1-75 முதல் 17-8-77 முடிய அடவுவைத்து மீட்கப்படாத நகைகள் மாவும் 21-3-79ம் திகதி காலை 9 மணி முதல் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

திருமதி டி.வி.ஆர்.சுவாமி
ஏலதாரர்
1922

பிரிவுபசார விழா

(புலோலி)

வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அம்பன் பகுதி கிராம சேவை அலுவலராகக் கடமையாற்றி தும்பளைப் பகுதிக்கு இடமாற்றம் பெற்ற திரு. எஸ். சேதுநாயகத்திற்கு, இளைப்பாறிய அதிபர் திரி ஏ. வி. பொன்னு தலைமையில் பிரிவுபசார விழா வொன்று நடைபெற்றது.

கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை-கரம்பன் தெற்கு
தி. அ. இராசையாபிள்ளை வைத்தெண் எலிசபெத் முத்தம்மா.
இல. ஈடு. / 348 வழக்காளி

எதிராக

வேலுணை-சரவணை மேற்கு
இராமலிங்கம் நகுலேசபிள்ளை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/348ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1979ஆம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 26ஆம் திகதி (26-3-79) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நிர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 8000/-ம், இதிலே ரூபாய் 5000/-க்கு 22-11-76-ந் திகதி தொடக்கம் 31-5-77-ந் திகதி வரைக்கும் 100க்கு 18 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 553-47 சதமும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் திவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணையிறை "மடைக்கல் புளியடி" நெற்பரப்பு (18) பதினெட்டு. எல்லை கிழக்கு கதிரவேலு நகுலதப்பிக்கும் பெண் தெய்வானைக்குமுரிய ஆதனம், வடக்கு கதிரவேலு சண்முகத்திற்கும் பெண் கண்ணம்மாவுக்கும், சினி இராமநாதிக்கும் பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு பொன்னம்பலம் டென் அன்னம்மாவின் ஆதனம், தெற்கு முத்தையா சோமசுந்தரத்தின் காமைக்காரரின் ஆதனம், இதடங்கலிற் சொரிடலாய் (½) அளவாசியும் இதற்குரியனவளவும். ஆட்சி மேற்குப் பக்கமாக இருக்கிறது முறிபதிவு C 447/111

சின்னத்தப்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்.

தெல்லிப்பழை
3-2-79
1914

பதவி வெற்றிடம்

காசாளர் (CASHIER)

யாழ்ப்பாணம் த பினான்ஸ் கம்பனி நிறுவனத்தால் காசாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 25—35 வயதிற்குட்பட்டவராகவும் காசாளர் பதவியில் அனுபவமும், தகுந்த கல்வியறிவும், திடகாத்திரமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 1979 மார்ச் 25ந் திகதிக்கு முன் கிழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

முகாமையாளர், (நிர்வாகம்)
த பினான்ஸ் கம்பனி லிமிட்.
191, பின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பதவி - வெற்றிடம்

பணவகூல் உத்தியோகஸ்தர்
[Recovery Officer]

யாழ்ப்பாணம் த பினான்ஸ் கம்பனி நிறுவனத்தில் பணவகூல் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பதாரர் 30—45 வயதிற்குட்பட்டவராயும், நீதிமன்ற அலுவல்களில் அனுபவம், தகுந்த கல்வித்தராதரம் ஆகியவற்றுடன் நல்ல திடகாத்திரம் உடையவராயும் இருத்தல்வேண்டும் மும்மொழிகளிலும் அறிவு மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

விண்ணப்பத்துடன் 'பாஸ்போட்' அளவு படம் இணைத்து 1979 மார்ச் 30ம் திகதிக்கு முன்னர் கிழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

திரு. அன்ரனி பெரேரா
உதவிபொதுமுகாமையாளர்
த பினான்ஸ் கம்பனி லிமிட்.
3-வது மாடி,
சிலிங்கோ ஹவுஸ், கொழும்பு-1

"சீதனக் கொடுமையை சட்டரீதியாக நீக்கவேண்டும்"

கோப்பாய் எம். பி. வேண்டுகோள்

[மட்டுவில்]

தேவை ரீதியாகவும்- சட்ட ரீதியாகவும், அன்று நமது சமுகத்தில் தலைகாட்டிய சீதனம், இன்று சமுகவிரோதியாக மாறியுள்ளது. இதை சட்டரீதியாகத் தடைசெய்வதற்கு நமது இளைஞர்கள் முன்வரவேண்டும்".

செல்வா நினைவு அறங்காவற்குழு நடாத்திய பயிற்சியின்போது உரைநிகழ்த்திய கோப்பாய் எம். பி. திரு. சிதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறுகூறினார்.

தைதடி சைவசிறுவர் இல்லத்தில், அறங்காவல்குழு தலைவர் பேராசிரியர் கே. நேசையா, செயலாளர் திரு க நித்தியானந்தம் ஆகியோர் தலைமையில் அறங்காவற்குழு தொண்டர் பயிற்சி நடைபெற்றது.

சுமார் 100 தொண்டர்களான இளைஞர்களும், யுவதிகளும் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். இப் பயிற்சித் தொண்டர்கள், தாம் சீதனம் வாங்குவதில்லை, கொடுப்பதில்லை, கொடுப்போரையும் அறவழில் தடைசெய்வதென சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். திரு. சதிரவேலுப்பிள்ளை எம். பி. தொடர்ந்து கூறியதாவது:-

பெரிபூர் தாய்கல்விகற்பித்த தமது மகனுக்காகவும் மகளின் சகோதரிகளுக்காகவும் சீதனமாக பெற்றுக்கொள்வது இலஞ்சம். இந்த இலஞ்சம் ஒரு தனியனிதர் வாழ்வில் மட்டுமல்ல. ஒரு சமுகத்தின் முன்னேற்றத்திற்கே தடைக்கல்லாக அமைந்துள்ளது. இந்த சீதனம் காரணமாக பல பெற்றோர் தகாதவழியில் சம்பாதிக்கவேண்டிய நிலையுள்ளனர். இந்த சீதனக் கொடுமையை ஒழிப்பதற்கு எமது இளைஞர்களும், யுவதிகளும் ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும் என்றார்.

பேராசிரியர் கே. நேசையா பேசும்பொழுது ஒரு புதிய சமுசாயத்தை அமைப்பதற்கு தொண்டர்களின் தொண்டு பாரியது. தொண்டாகும். சத்தியத்தின் அடிப்படையிலே இவர்கள் தொண்டாற்ற வேண்டும் என்றார்.

திரு சச்சிதானந்தம் உட்பட பலர் பேசினர். [கு]

கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மூன்றாம்தர சிங்கள தேர்ச்சி நிபந்தனையிலிருந்து விதிவிலக்கு வழங்குமாறு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் அரசாங்க மருந்து கலவையாளர்கள் [டிஸ்பென்சர்கள்] சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையின் விசேட செயற்குழுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கிளைச் சங்கத் தலைவர் திரு. ஆ. நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 3மதிப்படி தீர்மானத்தின் பிரதிகள் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். தொண்டமான், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோருக்கும் அனுப்பிவைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. [கு]

'இருதயக் கல்லூரி ஒருகலைக் கோயில்'

[உடுப்பிட்டி]

வடமராட்சியின் பாரம் பரியமும் பண்பாடும் மிக்க ஒருகல்லூரியாக திரு. இருதயக்கல்லூரி விளங்குகின்றது கத்தோலிக்க துறவிகளின் நிர்வாகத்தின் கீழ் உருவாகிய இக்கல்லூரி ஒரு கலைக்கோயில் என்று பாராட்டுவதில் நான் பெருமை அடைகின்றேன் கல்வித்துறையில் அனுபவமும் ஆற்றலும் மிக்க திரு தோமஸ் ஈப்பன் அதிபராக இருப்பதும் இச்சிறப்பிற்கு ஒரு காரணமெனலாம்.

இவ்வாறு சரவெட்டி திரு. இருதயக்கல்லூரிக்குத் திடீர் விஜயம் மேற்கொண்ட வட மாநிலக்கல்வி பணிப்பாளர் திரு தி மாணிக்கவாசகர் ஆசிரியர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார் வித்தியாதிபதியுடன் பத்துக்கல்வி அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றும் வந்திருந்தது.

கல்விஅதிகாரி திரு வ. தங்கராசா பேசுகையில் இம்முறை ஜீ சீ ஈ (சாதாரண) பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் பெருமளவில் மாணவர்கள் சித்தியடையத்தவறியதற்கு மாணவர்கள் தமிழ் நூல்களைப் போதியளவில் வாசிக்கும்பழக்கம் இல்லாததே யாகும். ஆதலால் பாடசாலைகளில் நூல் நிலையங்களை அமைத்துத் தமிழ் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை வளர்க்கவேண்டும். இதன் மூலம் தமிழில் மாணவர்கள் போதிய தேர்ச்சியைப் பெறமுடியும்" என்றார். [கு]

மரத்திலிருந்து விழுந்து மரணம்

[யாழ்ப்பாணம்]

தென்னைமரத்தில் கள்ளு இறக்கிக்கொண்டிருந்த சிவன் தொழிலாளியொருவர் தவறி விழுந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

இச்சம்பவம் கோப்பாயில் இடம்பெற்றது. ஐயன் சின்னவி [வயது 56] என்ற தொழிலாளியே இவ்வாறு மரணமானார். மரணவிசாரணையை யாழ். நிலமரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிராங்சிஸ் நடாத்தி விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.
[கே]

சிகரஞ்சன சபா இசைவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபாவின் 28-வது ஆண்டு இசைவிழா அடுத்த மாதம் 27-ம் திகதி தொடக்கம் பத்துத் தினங்கள் யாழ் ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள இசைக் கலைஞர்கள் பங்குபற்றுவார்கள். ரசிக ரஞ்சன சபா சங்கீத கல்லூரி மாணவர்களின் நிகழ்ச்சிகளும் விசேஷப்பாட்டு நாதஸ்வரக் கச்சேரிகளும் இடம் பெறும்.

இந்நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யுமாறு இலங்கை வானொலியைக் கேட்டுக் கொள்வதாக சபாவின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (அ)

சங்கீத ஆசிரியருக்கு பயிற்சி

[உடுப்பிட்டி]

யாழ் மாவட்ட சங்கீத ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பொன்று வடமாநில கல்வித் திணைக்களம் நடத்தி வருகின்றது.

இப்பயிற்சி வகுப்பு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் சங்கீதவியல் கலவி அதிகாரி திரு சு கணபதிப்பிள்ளையினால் இன்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மக்கள் கருத்து

ஈழத்தமிழ் எழுத்தாளருக்கு ஒரு நல்லவாய்ப்பு

தமிழ்நாடு அடையாற்றிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் "உலகத் தமிழ் எழுத்தாளர்" என்ற தொகுப்பு நூலைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

இந்நூலில் எழுத்தாளர் பற்றிய பயனுள்ள பல தகவல்கள் இடம்பெறவிருக்கின்றன. பெயர், புனைப்பெயர், முகவரி, கல்வித்தகுதி, வயது, பெற்றுள்ள பட்டங்கள், தொழில், சென்றுவந்த நாடுகள், படைப்புக்கள் போன்ற 18 விடயங்கள் விபரமாக இடம்பெறவிருக்கின்றன.

ஈழத்தில் பரந்து வாழும் தமிழ் எழுத்தாளர்கள் அவர்கள் எந்த அணியைச் சேர்ந்தாலும் இத்தகைய அரிய வாய்ப்பை இழந்து விடக் கூடாது.

ஈழத்தில் இப்படி ஒரு நூலை வெளியிட ஆயிரக்கணக்கான பணம் செலவிடவேண்டும். இப்படி ஒரு நூலை அச்சிட்டு வெளியிட்டாலும் புத்தகக் கடைகளில் விலை போகாது. பதிப்பகத்தாரும் இப்படியான நூலை வெளியிட்டு நஷ்டப்பட முன்வரமாட்டார்கள்.

எனவே தமிழ்நாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் எழுத்தாளர்களுக்கு அளித்துள்ள வாய்ப்பை ஈழத்து எழுத்தாளர்கள் தக்கபடி பயன்படுத்தவேண்டும்.

ஈழத்து பழம்பெரும் எழுத்தாளர்களும், இளம் எழுத்தாளர்களும் இந்நூலில் இடம் பெறுவதானால் ஈழத்திலுள்ள பொது நிறுவனமொன்று முன்வந்து பொறுப்பேற்று இப் பணியைச் செய்து முடிக்க வேண்டும்.

பழம்பெரும் எழுத்தாளர்கள் தமிழ்நாட்டிலுள்ள நிறுவனத்துக்கு எழுதி அதற்குரிய படிவத்தைப் பெற்று பூர்த்தியாக்கி அனுப்பிவைப்பார்களென்பது எதிர்பார்க்க முடியாததொன்றாகும். ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்கள் படிவத்தைப் பெற்று இந்நூலில் இடம்பெற, ஆற்றலும் அனுபவமும் உள்ள எழுத்தாளர்கள் இந்நூலில் இடம்பெறுவது விடப்பட்டுவிடுவார்கள். இப்படி ஏற்படும் போது அது ஈழத்து எழுத்து உலகிற்குப்பெரும் நஷ்டத்தை ஏற்படுத்திவிடும்.

நூல் வெளிவந்த பின் ஆற்றலுள்ள பல எழுத்தாளர்கள் இடம்பெறவில்லையே என்று கவலைப்படுவதைக் காட்டிலும் நூல் வெளிவருமுன்பே அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

ஈழத்தில் பிரிவு பிரிவாகப் பல எழுத்தாளர் சங்கங்கள் இருக்கின்றன. அவை தத்தமது சங்க நலன் பேணும் எழுத்தாளர்களையே இந்நூலில் இடம்பெறச்செய்ய முன்வரலாம்.

ஈழத்து தமிழாராய்ச்சி நிறுவனம் இதற்கான பொறுப்பை ஏற்று எழுத்தாளர்கள் பற்றிய விபரங்களைப் பெற்று இந்நூலில் ஈழத்து எழுத்தாளர் அனைவரது விபரங்களையும் இடம்பெறச்செய்ய முன்வரவேண்டும் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

தமிழகத்திற்கு எழுதிப் படிவங்களைப் பெற்று நிரப்பி மீண்டும் அங்கு அனுப்புவதற்கு வாய்ப்பின்றியிருக்கும். பழம்பெரும் எழுத்தாளர்களை ஏனையோர் தங்கள் முகவரிகளை எனக்கு அனுப்பிவைத்தால், அந்நூலில் இடம்பெற நிரப்பி அனுப்பும் படிவங்கள் இரண்டையும் அனுப்பிவைக்க ஆவன செய்வேன். என்னிடம் அதற்கான படிவங்கள் இருக்கின்றன. பழம்பெரும் எழுத்தாளர்கள் தயவு செய்து தங்கள் முகவரியை அனுப்பிவைப்பார்களாக.

புத்தொளி.

அச்சுவேலி.

"பண்பாடு காக்கும் சமுதாயமாக நாம் மாறவேண்டும்"

--- அமிர்தலிங்கம்

[மாவிட்டபுரம்]

"பண்பாடு காத்த பண்டைய தமிழர் சமுதாயம் இன்று அதை விடுத்து ஒழுக்கம் கட்டுப்பாடற்றதாக வளர்ந்துவருவது வேதனையளிக்கிறது. நல்ல சமுதாயத்தை உருவாக்குவதில் ஆரம்பபாட சாலைகள் பெரும் பங்குவகிக்க முடியும். ஆரம்பத்திலே நல்ல வகையில் அத்திவாரமிடப்பட்டால் எதிர்காலத்தில் நமது சந்ததியினர் நல்ல வழியில் செல்வது திண்ணம்."

இவ்வாறு மல்லாகம் கன்ஷ்டவித்தியாசாலை புதிய கட்டிடத் திறப்புவிழாவில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நமது கல்வித்துறையில் இன்று ஏற்பட்டுள்ள சீரழிந்த நிலை நமக்குக் கவலையையே தருகிறது. ஆரம்பக் கல்வியில் பெற்றோரின் கவனம் குறைவு; ஆனால் பிள்ளைகள் வளர்ந்ததும் ஏராளமான பணத்தைத் கொட்டி 'ரியூசன்' என்றெல்லாம் செலவு செய்கிறார்கள். அதனால்தான் நமது சமுதாயம் ஆரம்பத்தில் நல்ல அத்திவாரமிடப்படாமல் ஒழுக்கம் கட்டுப்பாடற்றதாக எதையும் குழப்பியடிக்கும் சமுதாயமாக மாறிவிட்டது. இந்நிலை மாறவேண்டும். பண்பாடு காக்கும் சமுதாயமாக நமது சமுதாயம் மாறவேண்டும். நாம் எப்படி வாழவேண்டுமென ஆறுமுகநாவலர் தொடக்கம் எத்தனையோ மகான்கள் எழுதியதைப் பார்த்துச் சிரிக்கிறோம். நாகரிகம் என்று சொல்லி, வேற்று நாகரிகத்தில் கூட நல்லதை விடுத்துத் தீயதையே பின்பற்றிவருகிறோம்; இந்நிலை மாறவேண்டும்."

மற்றும் பலரும் பேசினர்.

(அ)

பாப்பரசர் பிரதிநிதி நாளை யாழ்.வருகிறார்

[யாழ்ப்பாணம்]

புனித பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரது பிரதிநிதியாக இலங்கை வந்துள்ள டாக்டர் வணபிதா நிக்கொலோ | ரெட்டுண்ணெ நாளை ஞாயிற்றுக்கிழமை முதற்தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார் இங்கு அவர் திருப்பலிப்பூசை நடத்துவார்.

அன்றைய தினம் மாலை யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்படும் விசேட மேடையில் திருப்பலிப்பூசை நடைபெறும் விசேட நிகழ்ச்சியாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இறக்குமதிக் கொள்கையால்

பாதிப்புறும் வடபகுதி விவசாயிகள்

மிளகாய், வெங்காயத்துக்கு உத்தரவாதவிலையை நிர்ணயித்து அரசாங்கம் அமுல் படுத்தாததால், வவுனிக்குள தனினமயப்படுத்தல் திட்டத்தின்கீழ் அவதிப்படும் ஏழை விவசாயிகள், மேலும் மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்றுநீர்

ஏற்று-நீர், முதன் முதலாக மிளகாய், வெங்காயச் செய்கைக்கு என வவுனிக்குள திட்டத்தில் அமுல் படுத்தப்பட்டது. நாளடைவில் வவுனிக்குள திட்டத்தை விசேட நிட்டமாகக் கணித்து, ஏற்று நீர் வசதியுடன் மிளகாய் வெங்காயம் திட்டத்தின் இரு வாய்க்கால்களிலும் செய்கை பண்ணப்பட்டது. ஏற்று நீர் வரியாக மூன்நூறுரூபாய் ஒரு ஏக்கருக்கு அறவிடப்பட்டது. சென்றவருடம் தவிர (1978 உற்பத்தி ஆண்டாக ஜனதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டது) அதற்கு முற்பட்ட ஏற்று நீர் வரி அரசாங்கத்துக்கு செலுத்தப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டு உணவு உற்பத்தி ஆண்டாக பிரகடனப் படுத்தப்பட்டாலும், உப-உணவுப் பொருட்களாகிய மிளகாய் வெங்காயம், இறக்குமதி செய்யப்பட்டமையால், இப்பகுதியிலுள்ள கமக்காரர்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகினர். சென்ற வருடம் மிளகாய், வெங்காயம் முதலியவைகளை உள்ளூரில் உற்பத்தி செய்தவர்கள், இவற்றை விற்முடியாமல், கேட்ட விலைக்கு கொடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். காரணம் போதியளவு வெங்காயம் மிளகாய் அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்டதே!

வவுனிக்குள விசேடதிட்ட கமக்காரர்களும் உணவு உற்பத்தி ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய ஏற்றுநீர் வரி ரூ. 300-00, நாலு சில்லு உழவு இயந்திரம், 2 சில்லு உழவு இயந்திரத்திற்கு மனுப் பண்ணியவர்கள் மட்டும் செலுத்த; மற்றவர்கள் எவரும் குறிப்பிட்ட வரியை செலுத்தவில்லை.

ஏகமனதான தீர்மானம்

1979-01-29ந் திகதி இப் பகுதியில் ஏற்றுநீர் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு மாவட்ட காணி அதிகாரி (விசேட திட்ட அதிபர்) தலைமைதாங்கினார். மிளகாய், வெங்காயச் செய்கையினால் பாதிக்கப்பட்ட கமக்காரர்கள் இக்கூட்டத்தில் மிளகாய், வெங்காயத்திற்கு உத்தரவாத விலை உடனடியாக அமுல் படுத்தப்படவேண்டும் என்றும், 1978-ம் ஆண்டின் ஏற்று நீர் வரி இரத்துச்செய்யப்பட வேண்டும் என்றும் ஏகமன தாக தீர்மானம் நிறைவேற்றி அதை அன்று (1979-01-29) சமூகம்தராத முல்லைத்தீவு அரசாங்கஅதிபருக்கு அனுப்ப வேண்டும் என்றும் ஏகமன தாகத் தீர்மானித்தனர்.

1979-01-29ந் திகதி தீர்மானத்தை முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம், விசேடதிட்ட அதிபர், நீர்ப்பாசன பொறியியலாளர் [வவுனிக்குளம்]

நா. சண்முகம்

(யோகபுரம்)

நிகழ்ச்சிகள்

வணபிதா நிக்கொலோ ரெட்டுண்ணெ ஞாயிற்றுக் கிழமை மாலை 4-45க்கு யாழ். வந்து சேருவார். மாலை 6-00 மணிக்கு விசேஷபூசை 5-15 க்கு பொது வரவேற்பும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். [செ]

மாவட்ட விஸ்தரிப்பு அதிகாரி ஆகியோர் கையளித்தனர். முல்லைத்தீவு அரசாங்க அதிபர் எமது ஏகமனதான கோரிக்கையான உத்தரவாத விலைபற்றி நடவடிக்கை எதுவும் உருப்படியாக எடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால் இவ்வருடம் மிளகாய் செய்கையை செய்ய விரும்புவோர் இந்த மாதம் 20-ம் திகதிக்குள் ஏற்று-நீர் ரூ. 300 செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனுடன், சென்ற வருட ஏற்று-நீர் வரி அறவிடப்படமாட்டாது என்றும் அறிவித்துள்ளார். இது, எங்களுக்கு ஒரு மயக்கமான நிலையை தோற்றுவித்துள்ளது.

உத்தரவாத விலை

உத்தரவாத விலை பற்றி அரசாங்கத்தை வற்புறுத்த எமக்கு உரிமையுண்டு ஏனெனில் 1977-ம் ஆண்டு தனுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஏற்று-நீர் பெற்ற கமக்காரர்களாகிய எம்மிடமிருந்த அரிசிப் பங்கீட்டு புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டமைக்கு ஒரு காரணமாக ஒரு ஏக்கர் ஏற்று-நீர் வசதியுள்ள மிளகாய் செய்கையும், அதுபற்றி அரசாங்கத்தின் மதிப்பீடும் காரணமாகும்.

ஒரு ஏக்கர் மிளகாய்ச் செய்கையால் ரூ. 7200 வருமானமாக மதிப்பிடப்பட்டது. ரூ. 7200 வருமானமாக மதிப்பிட்டு, அரிசிப் புத்தகங்களை பறிமுதல் செய்த அரசாங்கம், மிளகாய், வெங்காயத்தையும் இறக்குமதி செய்து தொடர்ந்தும் இறக்குமதிக் கொள்கையை அமுல் செய்து உத்தரவாத விலைக்கே உலை வைக்கும் அரசாங்கம், தரப் படுத்தப்பட்ட தமிழ் மாணவர்களைப் போல தமிழ் விவசாயிகளையும் தரமட்டமாக்கி னால், அதில் வியப்பிலிலை!

வங்கிக்கடன் திட்டங்கள்

இதற்கு மேலாக மற்றுமொரு தாக்குதல் எம்மை எதிர் நோக்குகின்றது. சென்ற வருடம் மிளகாய்ச் செய்கைக்கு என்று ரூ. 1650 இலங்கை வங்கி கடன் கொடுத்தது. இக்கடனையும் உழவு இயந்திரங்களுக்கு மனுச்செய்தோர் தவிர மற்றையோர் திருப்பிச் செலுத்தவில்லை. ஆனால் நவின மயப்படுத்தல் திட்டத்தின்கீழ், இப்பகுதிக்கு 23 நாலுசில்லு உழவு இயந்திரங்கள் கடனுக வழங்கப்பட ஏற்பாடாகியது. 16 நாலு சில்லு உழவு இயந்திரங்களும், நாறு இரண்டு சில்லு உழவு இயந்திரங்களும் இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டு விட்டன. ஆனால் தவணைப் பணமாக ஒவ்வொரு மாதமும் வங்கிக்கு செலுத்த வேண்டிய மாதாந்தப் பணம் எட்டு நாலுசில்லு உழவு இயந்திரக் காரர்களால் திருப்பி செலுத்தப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் உழவு இயந்திரத்தால் வேலை செய்பவர்கள் கமக்காரர்கள். கமக்காரர்களாகிய நாங்கள் உப-உணவுப்பொருட்களை சந்தைப் பொருட்களாக விற்றுத்தான் கடனைச் செலுத்துவது வழக்கம். ஆனால் சந்தைப் பொருட்களாகிய மிளகாய், வெங்காயம் தேடுவாரற்று கிடக்கும்பொழுது, நாம் எப்படி உழவு இயந்திரக் கடனையோ, அல்லது வங்கி கடனையோ திருப்பிசெலுத்த முடியும்?

வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் மொத்தவிலை ரூ 20 இலட்சமாகும். இருபது இலட்சம் ரூபாவையும் இலங்கை வங்கி, ஒவ்வொன்றிற்கும் முற்பணமாக ரூ. 13,00 தவிர மிகுதியைப் பொறுப்பேற்றுள்ளது.

இறக்குமதிக் கொள்கை எதிரொலி

இக்கடன் மறைமுகமாக வவுனிக்குள குடியேறிறத்திட்டத்திலுள்ள ஒவ்வொரு விவசாயியையும் சாரும். ஒவ்வொரு விவசாயியும் ஒவ்வொரு வீடியும் அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கையினாலும் இலங்கை வங்கியின் கடன்பற்றியஅறிவித்தலாலும் தாக்கப்படுகிறான்!

தவக்கால நற்சிந்தனை

"இயேசு பெருமானின் திருஅவதாரக் காலத்தில் நான் பாலஸ்தீன நாட்டில் வாழ்ந்திருந்தால் நான் இயேசுநாதரின் திருப்பாதங்களைக் கழுவி அவருக்குத் தொண்டு செய்திருப்பேன், என் கண்ணீரால் அல்ல, எனது இதய இரத்தத்தால் அவரது திருவடிகளைக் கழுவித் தொண்டாற்றியிருப்பேன்."

—சுவாமி விவேகானந்தர்.

நம் உடல் சிலிர்க்கிறது அல்லவா! ஆன்மாவின் பாவங்களைத் தீர்க்க தம் உதிரத்தைச் சிந்திஞரே, அந்த உத்தமனுக்குச், சிலுவை நேசனுக்குத் தமது இதய இரத்தத்தையே காணிக்கையாக்கி இயேசுவின் பொற்பாதக்கமலங்களைக் கழுவவேண்டுமென்கிறாரே எத்தனைபேர் உண்மை. ஆம், விவேகானந்தர் இயேசுவைக் கேவலம் மனிதப்பிறவியாக நினைக்கவில்லை. அவரைத் தெய்வத்தின் திருஉருவாகவே கருதி வழிபடுகிறார். கிறிஸ்துவின் மக்கள் என நாமும் பூண்டநாம்...—?

—ஞானஒளி:

தொகுப்பு : வில்பிறெட்

இன்றைய பலன்

பங்குனிமாதம் 3-ம் திகதி

(17-3-1979)

சனிக்கிழமை

மேடம்: அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும், களஸ்திர வழியாலும் நன்மைகள் வந்துசேரும், காதலர்களுக்கு இனிப்பான தினம்.

இடபம்: புதிய முதலீடுகளை ஒத்திவைக்கவும், கொடுக்கல் வாங்கல் மூலம் மோதல்கள் ஏற்படக் கூடும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மிதுனம்: தேனை சம்பவங்கள் இடம்பெறும், முதியோர்கள் வாழ்க்கையில் இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும், தித்திப்பான தினம், இறைவழிபாடும் உண்டு.

கடகம்: பொதுவாகத் தொழிலில் வெற்றியுண்டு, எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். வியாபாரிகள் மகிழ்ச்சியடைவர், உல்லாசப் பயணமொன்றும் மேற்கொள்ளலாம்.

சிங்கம்: அதிர்ஷ்டலாபங்களுக்கு இடமுண்டு, புதித்

(4-ம் பக்கம் பார்க்க)

ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இஸ்ரேல் - எகிப்து ராஜீய உறவு

வாஷிங்டன், மார்ச் 16

எகிப்து-இஸ்ரேல் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானதும் ஒருமாத காலத்துக்குள் இரு நாடுகளும் ராஜீய உறவை ஏற்படுத்தி தமது தூதரகங்களை ஏற்படுத்திக்கொள்ளும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் மோஷே டயான் தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேல்-எகிப்து சமாதான ஒப்பந்தப்படி சைனாய் எண்ணெய்வயல் எகிப்திடம் மீண்டும்ஒப்படைக்கப்படும். ஆனால் சைனாயிலிருந்து எண்ணெயை வாங்கும் உரிமை இஸ்ரேலுக்கு இருக்குமென்றும் ஜெனரல் டயான் கூறினார்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இஸ்ரேலும் எகிப்தும் ஒருமாத காலத்துக்குள் ஒப்பந்தத்தின் அம்சங்களைச் செயல்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை அதிகாரிகள் மட்டத்தில் ஆரம்பிக்கும்.

ஜோர்டான் மேற்குக்கரைப் பகுதியில் பாலஸ்தீனியரைக் குடியமர்த்துவதற்கும் சமாதான ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேல்-எகிப்து சமாதான ஒப்பந்தத்தை அடுத்தவாரம் இஸ்ரேலியப் பிரதமர் திரு. மெனாசம் பெகின் இஸ்ரேல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

இதற்கிடையில் இஸ்ரேல்-எகிப்து சமாதான ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலில் நடந்த வெடிகுண்டுச் சம்பவத்தில் ஒருவர் மாண்டார், மற்றும் சிலர் காயமடைந்தனர்

சீனத்துருப்புக்கள் அனைத்தும் வாபஸ்

டோல்கியோ, மார்ச் 16

வியட்நாமிலிருந்து சீனத் துருப்புக்கள் யாவும் திருப்பி அழைக்கப்பட்டுவிட்டதாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தெரிவித்ததாக ஜப்பானிய செய்திச் சேவையொன்று அறிவித்துள்ளது.

'சென்டோ' முடிந்தது!

பாக்தாத், மார்ச் 16

'சென்டோ' எனப்படும் மத்திய பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு முற்றாகச் சீர்குலைந்து விட்டது. பாக்தாத் ஒப்பந்தம் என்ற பெயரில் 1955ம் ஆண்டில் இது அமைக்கப்பட்டது. சில வருடத்திலேயே இந்த அமைப்பிலிருந்து ஈராக் விலகிக்கொண்டது. ஈராக், ஈரான் பாகிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளைக் கொண்ட இந்த அமைப்பு அமெரிக்காவின் அனுசரணையுடன் இயங்கி வந்தது.

சென்ற திங்கட்கிழமை சென்டோவிலிருந்து விலகிக் கொள்வதாக பாகிஸ்தான் அறிவித்திருந்தது ஈரானும் சென்டோவிலிருந்து விலகிக் கொள்வதாக அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை அறிவித்தது. இப்பொழுது துருக்கியும் சென்டோவிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து சென்டோ முற்றாகச் செயலிழந்து அமைப்புக்குலைந்து விட்டது.

ரூ. 10 கோடி கைத்தறிப் புடவைகள்

சென்னை, மார்ச் 16

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம் இவ்வாண்டில் பத்துக்கோடி ருபாய் பெறுமதியான கைத்தறிப்புடவைகளை ஏற்றுமதி செய்யவிருக்கிறது. இதேசமயம் சென்னை மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் ஆடைகள் தயாரிக்கும்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இலங்கை விவசாயிகட்கு இந்தியாவில் பயிற்சி

இந்தியாவுக்குச் சென்று விவசாயப் பயிற்சி பெறும் வாய்ப்பு இலங்கை விவசாயிகளுக்கு எட்டவிருக்கின்றது. இருநாடுகளையும் சேர்ந்த இருநிறுவனங்கள் சேர்ந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்.

இத்திட்டத்தின் அடிப்படையில் இலங்கை விவசாயிகள் இந்தியாவுக்கு சென்று விவசாயப்பயிற்சி பெறுவர். அத்துடன் இந்திய விவசாயிகளுடன் கலந்துரையாடும் சந்தர்ப்பமும் வழங்கப்படும் என்று இலங்கை வந்துள்ள இந்தியத்தொழிலதிபர் திரு வி. ரி வேலு தெரிவித்தார்.

வீ எஸ். ரீ. டிரக்டர்ஸ் டிலர்ஸ் லிமிடட் என்ற நிறுவனத்தின் திருவாக இயக்குனரான திரு. வேலு தமது நிறுவனத்தின் உற்பத்தியான 'சக்தி' உழவு யந்திரங்களை இலங்கையில் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளார்.

'இங்கெமெக்ஸ்' என்ற இந்திய நிறுவனம் யுனைட்டட் அன்ற் ஈகுவிப்மன்ற் லிமிட்டட் என்ற இலங்கை நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து இவ்விற்பனை மேற்கொள்ளப்படும்.

'இளைஞர்களை ஒழுக்கசீலராக்க திட்டம்'

[சங்கானை]

''ஒரு நாட்டின் அபிவிருத்தி அந்தநாட்டின் மக்களிலேயே தங்கிஇருக்கிறது. இந்த நோக்கை அடிப்படையாகக் கொண்டே அரசு எதிர்கால சந்ததியினரான இளைஞர்களை ஒழுக்க சீலர்களாக்க பல திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது''

இவ்வாறு யாழ். மாவட்ட இளைஞர் விவகார அதிகாரி திரு. எஸ். நீலகண்டர். சங்கரத்தைக் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் திரு. நா. இரத்தினசிங்கம் தலைமையில் நிகழ்ந்த கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் நாட்டில இளைஞர் சக்தியை ஒன்று திரட்டி பொருளாதார அபிவிருத்தியை மேலோங்கச்செய்ய குளங்களை ஆழமாக்கியும் மற்றும் வடிகால், வீதிகள் போன்றவற்றை சிரமதானமூலம் செய்யவும் அவர்கள் சக்தியை பயன்படுத்த முன்வரச் செய்வதே இளைஞர் விவகார அமைச்சின் நோக்கமாகும்' என்றார். [அ]

குளங்கள் புனரமைப்பு

[உடுப்பிட்டி]

வடமராட்சிப் பகுதியில் விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

இதற்கு முன்னோடியாக உடுப்பிட்டி, பருத்தித்துறைத் தொகுதிகளிலுள்ள குளங்கள், வடிகால்கள் முதலியன பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. [கு]

இலக்கியப் பெருமன்றம் நாளை கூடுகிறது

[யாழ்ப்பாணம்]

மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் விரிவாக்கக் கூட்டம் நாளை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ் ஆனைப் பந்தி உயர் கலைக்கல்லூரியில் நடைபெறும்.

சில முக்கிய தீர்மானங்களும் செயற்திட்டங்களும் நிறைவேற்றப்படும் நாளையக் கூட்டத்தில் திருவாளர்கள் கே. டானியல், என். கே. ரகுநாதன் சில்லையூர் செல்வராசன் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

சங்காபிஷேகம்

[புலோலி]

பருத்தித்துறை கோட்டு வாசல் ஸ்ரீசண்டிகா சரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தான அஸ்தோத்திர மகா பங்காபிஷேகம் இம்மாதம் 29-ம் திகதி நடைபெறுகிறது.

சங்காபிஷேகத்தையடுத்து நல்லை ஆதினகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய ஸ்வாமிகளின் பக்தகௌரி என்னும் விடயம் பற்றி கதாப்பிரசங்கமும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 'சாமுண்டீஸ்வரி மகிமை'' என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவும் இடம்பெறும் [கு]

இராசிபலன்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலில் முதலீடு செய்வதற்கு ஏற்ற தினம், பிள்ளைகளின் நடவடிக்கை பெருமையைத் தேடித்தரும்.

கன்னி: சிந்தனை சிலந்தி வலை பின்னும், கடந்தகாலச் சம்பவமொன்று வேதனையைத் தரலாம், கடமையில் தளர்ச்சி காணப்படும், நிம்மதியற்ற தினம்.

துலாம்: இனப்பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும், திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப் படுவீர்கள், உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

விருச்சிகம்: பொருள்துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பேச்சில் நிதானம் பெருமையைத்தரும்.

தனுசு: தூக்கம் கெடும், எதிர்பார்த்ததில் தடைகள் உருவாகும், மனதில் ஆத்திரம் அலைமோதும், வாகனச் சாரதிகள் நிதானம் வேண்டும்.

மகரம்: ஆசிரியர்கள் வாழ்வில் மகிழ்ச்சிக்கிடமுண்டு, புதிய முதலீடுகள் வெற்றியைத் தரும், குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும்.

கும்பம்: வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும், எண்ணம்போல் யாவும் நடக்கும், உறவினர்கள் ஆதரவும் உண்டு. அரசியலிலும் பிரகாசிக்க இடமுண்டு.

மீனம்: உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும், வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். சதி செய்வதற்கு எதிரிகள் முனைவர், நிதானம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

செய்திச் சுருக்கம்

தொலைபேசி சீர்கேடு

[பண்டத்தரிப்பு]

பண்டத் தரிப்பு தபால்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் அடிக்கடி பழுதடைவதினால் அவசர தேவைகளுக்கு தொலைபேசி எடுக்கமுடியாது இப்பகுதி மக்கள் மிகுந்த கிரமம் அடைந்து வருகின்றனர். தொலைபேசி அழைப்பு பெறுவதற்கும் பலமணிநேரம் காத்திருக்கவேண்டியிருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

நவீன சந்தை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பில் மூன்று லட்சம் ரூபா செலவில் மற்றுமோர் நவீனசந்தை விரையில் நிறுவப்படவுள்ளது. இதற்கான நிதியை உள்ளூராட்சி அமைச்சின் விசேட மானியத் திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டைத் தொகுதி எம் பி திரு தா திருநாவுக்கரசு ஒதுக்கியுள்ளார்.

இந்த நவீன சந்தையை சிறந்தமுறையில் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை பண்டத்தரிப்பு பட்டணசபை விசேட ஆணையாளர் திரு எம் மயில்வாகனம் மேற்கொண்டுள்ளார்.

திருட்டுமுயற்சி தோல்வி

[சித்தன்கேணி]

சங்கானை மாவடி வைரவ கோவிலில், இரவு நேரத்தில் திருடர்கள் ஓடு பிரித்து இறங்கி, மரத்தொழிலாளர்களுடைய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வெளியில் வந்து பின்னர் மனம் மாறி வீதியின் ஓரத்தில் வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்களாம்! இது இறைவனுடைய அருள்என்று அப்பகுதி மக்கள் கூறிக்கொள்கின்றார்கள்.

40 000, ரூபா ஒதுக்கீடு

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு தா திருநாவுக்கரசு, காரைநகரிலுள்ள தோப்புக்காடு பிரதான வீதிக்கு மின்சார வசதிக்காக பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் 40,000 ரூபா ஒதுக்கிக்கொடுத்ததால் இலங்கை மின்சாரசபை வேலைகளை மேற்கொண்டுள்ளது.

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம்

[மாவிட்டபுரம்]

மல்லாகம் நீதிமன்றச் சட்டத்தரணிகள் சங்க வருடாந்தக் கூட்டம் நீதிமன்ற மண்டபத்தில் நடைபெற்ற சமயம் புதிய நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவாகினர்.

போஷகர்: திரு ஆர் என் சிவப்பிரகாசம். தலைவர்: திரு ஆர் ஜே செல்வரத்தினம், உபதலைவர்கள்: திரு சு நடராசா, ஆர் தம்பிரத்தினம், திரு அ குமரகுரு, திரு சிவஸ்ரீதரன், செயலாளர்: திரு க குணரத்தினம், உப செயலாளர் திருமதி இ விசுவநாதன், பொருளாளர்: திரு மு திருநாவுக்கரசு உபபொருளாளர்: செல்வி பத்திநாதர். தாய்ச்சங்க பிரதிநிதிகளாக சட்டத்தரணிகள் ஆர் ஜே செல்வரத்தினம் எஸ் நடராசா, ஜி வி பாலசுங்கம் ஆகியோரும் தெரிவாகினர்.

உரும்பராயில் கலைவிழா

[உரும்பராய்]

உரும்பராய் இந்துக்கல்லூரியின் கலைவிழா இன்று கல்லூரி அதிபர் திரு இ சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது இவ்விழாவில் கோப்பாய் எம் பி திரு சி கதிரவேலுப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார் செந்தமிழர் இயக்க செயலாளர் வி பொன்னம்பலம், உதவிஅரசாங்கஅதிபர், கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி ஆகியோர் பேசுவர். கவிஞர் கந்தவனத்தின் தலைமையில் கவியரங்கமும் கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் விவாதஅரங்கும்இடம்பெறும்.

இதிலும் தரப்படுத்தலா?

[வண்ணார்பண்ணை]

பாலர் வகுப்பு அனுமதியிலும் தரப்படுத்தல் நடக்கிறதா? இதை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு வடபிரதேச கல்விப் பணிப்பாளருக்கு தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி பெற்றோர் சிலர் முறையீடு செய்துள்ளனர். ஆரம்பக் கல்வி வகுப்புக்கு மாணவர்களை சேர்க்கும் முறையில் பல மாணவர்களுக்கு பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாகவும், இந்த அனுமதியில் ஏழை, பணக்காரர் என்ற ரீதியில் தரப்படுத்தல் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த முறையீட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

''நல்ல முடிவுடன் நாடு திரும்புவேன்'

[சித்தன்கேணி]

''எனது ஜப்பான் நாட்டுப் பயணம் எமது தொகுதிக்கும் நாட்டுக்கும் பிரயோசனமுள்ள பிரயாணமாக அமையும். சிறுகைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு உதவியைப் பெறுவதற்கு பேச்சுவார்த்தை நடத்தி நல்ல முடிவுடன்தான் திரும்புவேன்'' என்று வட்டுக்கோட்டை எம் பி திரு தா திருநாவுக்கரசு தனக்களிக்கப்பட்ட தேநீர்வுருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். வட்டுக்கோட்டை தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளைக் காரியாலயத்தில் காரியாலய ஊழியர்களாலும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாலும் இவ் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Shadow Man
Murder—Misery

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
லக்ஷ்மி
ஒரு நடிகை
நாடகம் பார்க்கிறாள்

விளக்கமறியல்

[புலோலி]

வல்லை பஸ்தரிப்பு நிலையத்தில் இளம் பெண்ணின் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, அடையாள அணி வகுப்புக்குட்படுத்தப்பட்ட சந்தேக நபர் பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இம்மாதம் 24ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (கு)

மின்சாரம் தாக்கி மரணம்

[சங்கானை]

வட்டுக்கோட்டை ஊர் ஆட்சி மன்ற மின்னிநியோகப் பகுதி ஊழியர் திரு. கனக சபாபதி கோபாலசிங்கம் கடமையில் ஈடுபட்டிருக்கும்போது மின்தாக்கத்திற்கு இலக்காகி மரணமானார்.

வட்டுக்கோட்டையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் மின்தறி நெசவாலை ஒன்றிற்கு சகஊழியருடன் மின் இணைப்பு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்வேளை மின்சாரத்தினால் தாக்கப்பட்டதும் உடனடியாக பிரதிதியேகவைத்திய நிலையத்திற்கு எடுத்துச் சென்று அவரைக்காப்பாற்றமுடியாமற் போய்விட்டது.

பண்டத்தரிப்பு மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்ஸ் அத்தனசியார் விசாரணை நடாத்தினார்.

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபரும் வட்டு ஊர்ஆட்சி மன்ற விசேட ஆணையாளருமான திரு. எம். சுப்பிரமணியமும் மற்றும் ஊழியர்களும் சாட்சியமளித்தனர்.

இலிமேலாவது மின்பகுதி ஊழியர்கள் கடமையில் ஈடுபடும்போது மிகவும்தானமாக நடப்பதோடு இப்படியான சம்பவம் நிகழாது எனத் தெரிவித்த மரணவிசாரணை அதிகாரி மின்தாக்கத்தால் மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்பு வழங்கினார். [கு]

நூல் அறிமுக விழா

[யாழ்ப்பாணம்]

சாந்தனின் 'ஒட்டுமா' குறு நாவல் நூல் அறிமுகவிழா இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் லோகநாதன் இன்ஸ்ரிரியூற் மண்டபத்தில் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

திரு. தேவன் யாழ்ப்பாணம், திருமதி சித்திரலேகா மௌனகுரு, ஜனாப் எம். ஏ. நுஃமான் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். [கு]

வழிப்பறி முயற்சி

[உரும்பராய்]

இளம்பெண் ஒருவரின் சங்கிலியை அபகரிக்க முயன்றவர், இளைஞர்களினால் துரத்திப் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்ட சம்பவம் உரும்பராய் மேற்கில் நிகழ்ந்தது! இரவுநேரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த இளம் பெண் ஒருவரின் சங்கிலியை பறிப்பதற்கு சைக்கிளில் சென்ற அதே ஊரைச்சேர்ந்த ஒருவர் முயன்றபோது, பெண் கூச்சலிட்டதால், தனது முயற்சியை கைவிட்டு ஓடிய போதே இளைஞர்களால் துரத்திப் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சைக்கிள் யாருடையது?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டருக்கு முன்பாக சைக்கிள் ஒன்று நேற்று அதிகாலை ஒரு மணியளவில் தியேட்டர் முகாமையாளரினால் கண்டெடுக்கப்பட்டு மனோகரா தியேட்டரில் உள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி சைக்கிளைப் பெற்றுக் கொள்ளலாம். [க]

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
பேசும் தெய்வம்
[புதிய பிரதி]

12-வது வாரம்
வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி சில தினங்கள்
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 615&9-45
ஸ்ரீதர்
சிவாஜி-வரலட்சுமி
நான் பெற்ற செல்வம்
(புதிய பிரதி)

கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
ராணி
[யாழ். நகர்]
முத்துராமன்-பிரமிளா
ஜெய்சித்ரா-ராகவன்
வாழையடி வாழை

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-தேவிகா
நடித்த
அன்னை இல்லம்
[புதிய பிரதி]

REGAL
Jaffna
Daily 5 Shows
10-30 a.m., 2-00, 4-30, 7-00 & 9-30 p.m only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு 10-00, 2-00 6-00 & 9-30
ஜெய்சங்கர்—லக்ஷ்மி
ராணி யார் குழந்தை
(புதிய பிரதி)

லிடோ
போன்: 7638
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
[யாழ் நகர்]
ஆசை அறுபதுநாள்

சாந்தி
போன்: 7642
கடைசித்தினம்
யாழ்நகர்
18-3-79
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ஜீற்றேந்திரா - ஜெயபாதுரி - பிரான்
"பரிச்சே" - ஹிந்தி - சஸ்ட்மன் கலர்

17-3-79 பி ப. 2-30 க்குமட்டும் 'நிதியுதவிக் காட்சி'
ஆடிப்பெருக்கு
19-3-79 THE GIPSY CAMP VANISHES in to the BLUE

வெஸ்லி
[கரணவாய்]
தினசரி 6-30, 9-15
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-வாணிஸ்ரீ
தபால்காரன் தங்கை

'கிராமப்புறப் பெண்களும் தொழில் பயிற்சிபெறவேண்டும்'

[சங்கானை]

"கிராமப்புறப் பெண்களும் தொழில் பயிற்சி பெறவேண்டும். முக்கியமாக பெண்களுக்குரிய தொழிலான தையல், பின்னவேலை போன்றவற்றில் நல்ல பயிற்சியை அவர்கள் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் நாடு பூராவும் இதுபோன்ற பயிற்சி நிலையங்களை அரசு அமைத்து ஒவ்வொரு நிலையங்களுக்கும் ஏழுபதினையாயிரம் ரூபாவை செலவிட்டு வருகின்றது. இதனை இப்பகுதி மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

இவ்வாறு, யாழ் மாவட்டத் தொழில் ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் சங்கரத்தை மாதர் சமிக மண்டபத்தில் தையல் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு நா. இரத்தினசிங்கம் தலைமையில் மேற்படி பயிற்சி வகுப்பு சம்பிரதாயமுறைப்படி ஆரம்பமானது.

திரு. ஞானப்பிரகாசம் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் 'குடும்பப் பெண்கள் முக்கிய மாசப் பெறவேண்டிய பயிற்சியில் தையல் கலையும் ஒன்றாகும். படித்த பெண்கள் எல்லோரும் அரசாங்க சேவையில் சேர்வதென்றல் முடியாத காரியம். அப்படியானாலும் நிறமை அடிப்படையே கணிக்கப்படுகின்றது. பெண்கள் சுயவேலைவாய்ப்பை பெறுவதற்கு இது நல்ல வரப்பிரசாதமாக அமையும்' என்றார்.

திரு. நா. இரத்தினசிங்கம் தமது தலைமை உரையில் 'அரசாங்கம் தொழுதி ரீதியாக இரண்டு பயிற்சி நிலையங்களை அமைத்து வருகின்றது. ஒன்று தையல் நிலையம், மற்றது பின்னவேலை நிலையம். இவைகளில் வட்டுத் தொகுதியில் தையல் நிலையம் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் சேர்ந்துள்ள இருபது பேரும் ஐ. தே. கட்சியின் சிபார்சிலேயே அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோர் நாள் ஒன்றிற்கு மூன்று ரூபா வீதம் ஊதியமாக பெறும் வசதியை அரசு ஆக்கியுள்ளது. இவர்களின் பயிற்சி முடிவுற்றதும் தையல் மெஷினையும் சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலைவாய்ப்பும் கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது' என்று கூறினார்.

இந்திய சர்க்கரைக்கு 3 மடங்கு சுங்க வரி

[கொழும்பு]

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கு மூன்று மடங்கு சுங்கவரி விதிக்கப்படவிருக்கின்றது.

இத்தகவலை வர்த்தகப்பகுதி அமைச்சு அறிவித்துள்ளது. உள்ளூரில் சர்க்கரை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்திய சர்க்கரைக்கு சுங்கவரி அதிகரிக்கப்படுவதால் உள்ளூர் சக்கரையில் விலை குறையும் என்று கருதப்படுகிறது.

சூருவளி தாக்கிய பகுதிகளுக்கு அமெரிக்க வானொலிப் பெட்டிகள்

[கொழும்பு]

சூருவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர நிவாரண வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்க வானொலி உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

அமெரிக்கத் தூதுவர் திரு. ஹவார்ட் ரிக்கிஸ் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மேஜர் மொன்டேகு ஜயவிக்கிரமாவிடம் இந்த உபகரணங்களை கையளித்தார்.

வானொலி அஞ்சல் கருவிகள், வானொலிப் பெட்டிகள், அவற்றோடு தொடர்புடைய உபகரணங்கள், இலைப்புக் கருவித் தொகுதிகள் ஆகியன இந்த அன்பளிப்பில் அடங்கும்.

இன்னும் போதிய தகவல் தொடர்பு வசதிகள் இல்லாதிருக்கும் மட்டக்களப்பு, பொலநறுவை, அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள இலங்கை அதிகாரிகளுடன் தகவல் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

ஏழைகளுக்கு உதவும்
பூகமதலி ஆரம்பிக்கும் உலக ஸ்தாபனம்

[நியூயோர்க்]

ஏழைகளுக்கு உதவும் பொருட்டு சர்வதேச ஸ்தாபனம் ஒன்றை அமைக்கப் போவதாக உலக அபாரக்குத் துச் சண்டை சாம்பியனான் முகமதலி கூறியிருக்கிறார்.

இந்த ஏழைகளுக்குதவும் சர்வதேச ஸ்தாபனத்துக்கு அதிபர் ஜிம்மி கார்ட்டரும் சோவியத் அதிபர் பிரெஷ்னேவும் ஆதரவு தருவதாக வாக்களித்திருக்கிறார்களென்றும் முகம்மதலி அறிவித்துள்ளார்.

மிகப் பெரிய மீன்பிடிப் படகுகள்

[சித்தன்கேணி]

சி-நோர் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தில் கல்நாரினாலான 62 அடி நீளமான படகும், சிமெந்தினாலான 42 அடி நீளமான படகும் அண்மையில் உற்பத்தி செய்யப்பட்டன. இந்நிறுவனம் கல்நார் [அஸ்பெஸ்டாஸ்], சிமெந்து ஆகியன வற்றினால் உற்பத்தி செய்த படகுகளுக்குள் இவை இரண்டு படகுகளுமே மிகப்பெரிய படகுகளாகும். இந்நிறுவனம் உற்பத்திசெய்யும் படகுகளுக்குப் பெருமளவு கிராக்கி தற்போது இருப்பதனால் இந்நிறுவன ஊழியர்கள் இரவு பகலாக படகு உற்பத்தி வேலைகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். அண்மையில் இலங்கை மீன்பிடிக்கூட்டுத்தாபனம் ஏராளமான படகுகளுக்கு இங்கு ஓடர் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. [அ]

பரிவர்த்தனை நிலையம்

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் மத்திய தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் ஒன்று விரைவில், திறந்துவைக்கப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [அ]

"ஒற்றுமை குலையாமல் இன விடுதலைப் பாதையில் முன்னேறுவோம்"

ஏழாலையில் சந்ததியார்

[மாவிட்டபுரம்]

"தேர்தல் ஒரு சனியன் என்று கூட்டணி செயலதிபர் திரு. அமிர்தலிங்கம்கூட பல தடவைகளில் கூறியிருக்கிறார். அந்தத் தேர்தல்மூலம் நம்மிடையே போட்டி, பொருளாசை ஏற்பட்டு எமது ஒற்றுமை குலையாமல் இன விடுதலைக்கான பாதையில் முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்பதே எமது ஆசை. அதற்காகவே தேர்தலில் ஈடுபடுவதில்லை என்ற முடிவை எடுத்தோம். இம்முடிவு கூட்டணியைக் குலைப்பதற்கோ, உடைப்பதற்கோ அல்ல"

இவ்வாறு இளைஞர் பேரவைப் பிரமுகர் திரு. த. சந்ததியார் ஏழாலையில் நடைபெற்ற இளைஞர் கலந்துரையாடலில் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

செல்வன் சி சக்திகிரிவன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இந்நாட்டிலே படிப்படியாக எமது இனம் பின்தள்ளப்பட்டும், அடக்கி ஒடுக்கப்பட்டும் வந்தமையால் இறுதியான மாற்ற முடியாத தீர்மானமாக தமிழ் ஈழத் தீர்மானத்தை எடுத்தோம். அத்தீர்மானத்தைத் தமிழ் மக்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட 1977 தேர்தலை சரிவர வாக்கெடுப்பாக நடத்தினோம். அதில் தமிழ் மக்கள் தமது நிலையை தெளிவுபடுத்தினர்கள். தீர்மானமும் எடுத்து அதற்கான மக்கள் ஆணையும் பெற்றபின் அதற்கான பயணத்தைத் தொடரவேண்டியதே நமது வேலையாக இருந்திருக்கவேண்டும். ஆனால் அப்படியாக நடைபெறாமையால்தான் அது இளைஞர் சக்தியால்தான் முடியும் என்ற முடிவெடுத்து நாம் செயல்பட முன்வந்துள்ளோம்.

தமிழ் மக்களது பிரதேசங்களைப் பறிப்பதிலும், தமிழ் மக்களிடையே வேறுபாடுகளை வளர்த்து பிரிவினைகளை உண்டுபண்ணுவதிலும் அரசு அக்கறை காட்டுகிறது மிகவும் பெரும்பான்மையுடைய அரசாங்கத்தால் தமிழருக்கும் சம உரிமை என்ற தீர்மானத்தை எடுக்க முடியவில்லை. ஆனால் எதிர்க் கட்சியிலிருந்து உறுப்பினர்களை வலைபோட்டுப் பிடிக்க சட்டத்தைக் கூட மாற்ற முடிகிறது. இந்நிலையில் நாம் சரியான பாதையில் செல்லவேண்டியது மிக அவசியமாகும்.

கூட்டணி தலைமையை ஏற்கின்றேம்

கூட்டணியின் தலைமையை நாம் ஏற்கிறோம். அதன் நோக்கம் தேர்தல்கண்மட்டும் சந்திப்போடு நின்றுவிடக் கூடாது என்பதே எமது ஆசை. தமிழ் ஈழ இலட்சியத்தின் அடிப்படையில் உருப்படியான நடவடிக்கைகளை எடுப்பதே எமது வேலை."

திரு. ப இறைகுமாரன் பேசுகையில் கூறியதாவது:-

வியட்நாம்மீது சில ஆக்கிரமிப்பு நடத்தியதை தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டித்திருக்கிறது அதுபோல் இந்து சமுத்திரத்தில் அமெரிக்க படைத்தளம் அமைக்கப்பட ஆலோசிக்கப்படுவதையும் வன்மையாகக் கண்டிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். (இ)

இன்று காங்கேசன் பிரெஞ்சு மாக்கப்பல்

இறக்குமதி வேலைகள் தனியாரிடம்

[காங்கேசன்துறை]

ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் மா மூடைகளுடன், பிரெஞ்சு நாட்டுக் கப்பல் ஒன்று இன்று காலை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வருகிறது.

கொழும்பு நோக்கிச் சென்ற 'எம். வி மன்ஸ் ரர்லாண்ட்' என்ற இந்தக் கப்பல், யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட மாகட்டுப்பாடு காரணமாகக் காங்கேசன்துறைக்கு திசை திருப்பப்பட்டுள்ளது. உணவு ஆணையாளர் திரு எம். பி. ஹதனின் உத்தரவைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறக்குமதி வேலைகளில் சுமார் ஆயிரம் துறைமுகத் தொழிலாளர் ஈடுபடுத்தப்படுவர் என்றும் இக்கப்பலின் இறக்குமதி வேலைகள் சுமார் பத்துத் தினங்களில் முடியும் என்றும் இறக்குமதி வேலைகளை பொறுப்பேற்றுள்ள 'க. ஜெயபாலசிங்கம் கம்பனி'ப் பிரதிநிதி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு இவ்வருடத்திற்கு வரும் முதலாவது உணவுக் கப்பல் இதுவாகும். இக்கப்பலைத் தொடர்ந்து சுமார் இரண்டு இலட்சம் மூடைகளுடன் ஒரு உரக்கப்பல் இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி வரவிருக்கின்றது.

சந்தேக நபர்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி

ரத்தினம், சட்டத்தரணிகளான மனோகரன், சட்டத்தரணி ஆ. அருள்தேவரத்தினம், சட்டத்தரணி அமுதன் இராசகாரிகர் ஆகியோர் ஆஜராஞர்கள்.

தொண்டமானாற்றைச் சேர்ந்த சந்தேகநபரான ரவி என்றழைக்கப்படும் சோமசுந்தரம் செல்வேந்திரனின் பிணை மனுவும் இந்த நீதிபதிகளின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பிணை வழங்குவதற்கு அரசசட்டத்தரணி ஆட்சேபித்தார்.

சட்டத்தரணி கரிகாலன், சந்தேகநபர் 1 வருடம் 3 மாதம் சிறையில் இருப்பதால் தொடர்ந்தும் சிறையில் வைத்திருக்க சட்டத்தில் இடமில்லை என்றும் 1978ல் பிணை மனுச் சட்டத்தை 1979ல் எனதான இவர் விடயத்தில் பாவிக்க முடியாதென்றும்வாதிட்டார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி கரிகாலன், சட்டத்தரணி கனகமனோகரன் ஆகியோர் ஆஜராஞர்கள். விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [ச]

இடைக்கால...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைக் கட்டுப்படுத்தி வழிநடத்தவும், அதன் அமைப்பை பூரணப்படுத்தவேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பூரண அதிகாரம் வழங்கியுள்ளது. இம்முடிவுகளுக்கு அமைந்து இளைஞர் பேரவையின் பொதுச்சபையை 7-4-79 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டணித் தலைமைச் செயலகத்தில் கூட்ட எண்ணியுள்ளேன். இத்தீர்மானங்கள் தொடர்பாக 30-3-79க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தங்கள் முடிவை எமது செயலக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்."

குடும்பநலத்திட்ட கருத்தரங்கு

[உடுப்பிட்டி]

இலங்கைக் குடும்பநலத் திட்டச் சங்கம் நடாத்தும் குடும்பநலத் திட்டம் பற்றிய கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிறு மல்வில் நடைபெறவுள்ளது.

மீனம்பாக்கத்தில்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சார்பிலும் அமைச்சர் ராஜாராம், எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி ஆகியோர் முதலில் பிரமாண்டமான மாலைகளை அணிவித்து வரவேற்றனர்.

தொடர்ந்து திராவிடர் கழகச் செயலாளர் திரு. கி. வீரமணி முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், காந்தி காமராஜ் காங்கிரஸ்கட்சி எம் பி திருகுமரி அனந்தன், உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் ஜனார்த்தனன், ஓ எஸ் மணி வைத்தம்பி, தமிழ்மன்னன் ஆகியோர் இருவரையும் மாலை சூட்டி வரவேற்றனர்.

விமானநிலையத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. விமான நிலையத்திலிருந்து அமிர் தம்பதிகள் மங்கள வாத்தியத்துடன் பெருந்திரளான மக்கள் புடைசூழ ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

எழும்பூரில் முதலாவது வரவேற்புக் கூட்டம்

இரவு 8 மணிக்கு எழும்பூரில் திரு. ஆர். ரி. சிதாபதி தலைமையில் அமிரை வரவேற்று மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பல லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் திருவாளர்கள் கருணாநிதி, வீரமணி உட்பட பலர் உரையாற்றினர். கூட்டம் 11 மணிவரை நடைபெற்றது

தமிழ் ஈழமே அசைக்க முடியாத கொள்கை

தமிழ் ஈழமே எமது இசைக்கமுடியாத கொள்கை. இக் கொள்கையிலிருந்து நாம் இம்மியளவும் விலகமாட்டோமென்று திரு. அமிர்தலிங்கம் எழும்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினார். [ம-இ]

லயன்ஸ் மாவட்ட ஆளுநர் யாழ். விஜயம்

[கொக்குவில்]

லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் எம். மனோகரன் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றார்.

இன்று மாலை 5 மணிக்கு திருநெல்வேலி முத்தமிழ் வித்தியாசாலையிலுள்ள விவசாயப்பயிற்சி மற்றும் உற்பத்தித் திட்டங்களைப் பார்வையிடும் இவர் இன்றுமாலை 6 மணிக்கு உரும்பிராய் மேற்கிலுள்ள ஸ்ரீ வைத்திஸ்வரா சனசமூக நிலையத்திற்குச் சென்று சனசமூக நிலையத்தின் மின் இணைப்பை ஆரம்பித்து வைப்பார். 6-30 மணிக்கு கோண்டாவில் வடக்கு சிறி நாராயண சனசமூக நிலைய பாலர் பாடசாலைக்கும், முதியோர் கல்வி நிலையத்திற்கும் விஜயம் செய்வார். நாளைக் காலை 8-30 மணிக்குகைதடியிலுள்ள நபிலட் பாடசாலையையும் வைத்திய சிகிச்சை நிலையத்தையும் பார்வையிடுவார். நாளை மாலை பருத்தித்துறை லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்வார்.

யாழ்நகரில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ் நகரில் பல விதிகளிலும் நின்ற இளைஞர்கள் பலரும் பொலிசாரினால் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்ட செய்தி நகரில் பரவியதும் பெருமளவு பலரும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். இது நகரில் சிறிது நேரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இளைஞர்கள் சிலர் யாழ் எம் பி. திரு வெ. யோசேப் வரனிடம் சென்று இது பற்றி முறையிட்டனர். அவர் இது பற்றி விசாரணை செய்ததைத் தொடர்ந்து திரு யோகேஸ்வரன் யாழ் பொலிசாருடன் தொடர்பு கொண்டார். வேண்டப்படாதவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் பொலிசார் தெரிவித்ததுடன் சந்தேகத்துக்கிடமான சிலரை மட்டும் மேல் விசாரணைக்காகத் தடுத்து வைத்து மிகுதிப் பேரைத் தமது இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிப்பதாகவும் தெரிவித்தனர்.

இதே சமயம் பொலிசார் வீதியில் நின்றவர்களைத் தமது வாகனங்களில் ஏற்றிச் செல்வதாகவும் இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறும் இளைஞர்கள் சிலர் யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனிடம் கூறியபோது அப்பாவிகள் அகப்பட்டிருந்தால் அவர்களைக் காப்பாற்ற வேண்டியதுதான் ஆனால் சந்திகளிலும் தெருக்களிலும் நின்று பெண்பிள்ளைகளிடம் குரங்குச் சேட்டை விடுபவர்களை இளைஞர்களே தடுத்துத் தகுந்த நடவடிக்கை எடுக்காதவரை எப்படிக் காப்பாற்றுவது என்று கேட்டதாகவும் தெரியவருகிறது.

வீதியில் நின்றவர்களைப் பொலிசார் அழைத்துச் சென்றது பற்றிப் பொலிசாரிடம் விசாரித்தபோது பிறிபொக்கட்காரர், கப்பம் கேட்டு மிரட்டுவோர், பெண்களிடம் சேட்டை செய்பவர்கள் வழிப்பறிக்காரர் ஆகியவர்கள் பற்றிக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏணை தீப்பற்றி பாலகன் பலி

(வாழ்ப்பாணம்)

வீட்டில் கட்டப்பட்டிருந்த ஏணையில் உறங்கிக்கொண்டிருந்த எட்டுமாதச் சிசு ஏணையில் தீப்பற்றியதால் கடும் எரிகாயங்களுக்குள்ளாகி மரணமானது.

இப்பரிதாப சம்பவம் பலாலி தெற்கில் இடம் பெற்றது. மரணவிசாரணையை யாழ் நீதிமரணவிசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் நடாததி விபத்துமரணமெனத் தீர்ப்பளித்தார்.

மரணவிசாரணையில் குழந்தையின் தந்தை பாலையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவதினம் எனது வீட்டிற்கு முன்பாக மரணவீடு ஒன்று நடை பெற்றது. இறந்த குழந்தை ஏணையில் இருந்தது. தண்ணீர் அள்ளுவதற்காக நான் பின்புறத்தில் குட மொன்றை எடுக்கச் சென்ற போது குழந்தையை வளர்த்தி யிருந்த ஏணையில் நிப்பிடித்து குழந்தை எரிகாயங்களுடன் நிலத்தில் விழுந்து துடிதுடிப் பதைக் கண்டேன். பக்கதில் குப்பிவிளக்கொன்றும் இருந்தது. எனது மற்றைய மூன்று வயதுக் குழந்தையும் அருகில் இருந்தது. எரிகாயங்களுக் குள்ளான குழந்தையை ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். அங்கு குழந்தை மரணமானது என்று கூறினார். (கெ)

மரண அறிவித்தல்

அருளம்பலம் கனகம்மா

காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற என்ஜினியர் அருளம்பலத்தின் மனைவி கனகம்மா காலமாகிவிட்டார். தேவகி அம்மா, [ஆசிரியை யாழ். செம்மோரிஸ் மகாவித்தியாலயம்], ராஜேந்திரா [பெருந்தெருக்கள் திணைக்களம் பூநகரி], யோகேந்திரா [இலங்கைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்], குலேந்திரா என்ஜினியர் லண்டன்], ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமநாதர் [கல்வி இலாகா யாழ்ப்பாணம்], வசந்திராதேவி, சுபத்திரா தேவி ரதிவதனி [பல் டாக்டர் லண்டன்] ஆகியோரின் அன்பு மாமியாருமாவர். அன்னாரின் பூதவுடல் காரைநகர் வேம்படியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று (17-03-79) காலை 10 மணிக்கு சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 1932-

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389,